செ.வெ.எண்:04/ஜனவரி நாள்: 04.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**
**இராமேஸ்வரத்திலுள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவிலில் வருகிற ஜனவரி 15 முதல் 20-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள திருக்குட நன்னீராட்டு பெருவிழாவினை சிறப்பான முறையில் நடத்திட அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் பேச்சு**

---

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் , வருகிற ஜனவரி 15 முதல் 20-ஆம் தேதி வரை இராமேஸ்வரத்திலுள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவிலில் நடைபெறவுள்ள திருக்குட நன்னீராட்டு பெருவிழாவினை சிறப்பாக நடத்துவது தொடர்பாக அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று (04.01.2016) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்திலுள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவில் உலக புகழ் வாய்ந்த கோவிலாகும். இக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா வருகிற ஜனவரி 15 முதல் 20-ஆம் தேதி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. இத்திருவிழாவிற்கு தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்களில் இருந்தும், பல நாடுகளில் இருந்தும் பக்தர்கள், சுற்றுலாப்பயணிகள் மிக அதிகமாக வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, காவல்துறை மற்றும் தீயணைப்பு மீட்புப் பணித்துறையினர் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். திருக்கோவிலுக்கு அருகில் தீயணைப்புப் பணியாளர்களுடன் தீயணைப்பு வண்டி நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். காவல்துறையினர் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் வாகனங்கள் வந்து செல்வதற்கும், நிறுத்துவதற்கும் தகுந்த ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். குடமுழுக்கு தினத்தன்று திருக்கோவிலுக்கு அருகில் போதிய மருத்துவ குழு மற்றும் 108 ஆம்புலன்ஸ் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளையும், பக்தர்கள் சீரான முறையில் தரிசனம் செய்திட ஏதுவாக தடுப்புகள்(பேரிகார்டு) அமைத்திடவும், திருக்கோவில் நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை செய்திட வேண்டும். இது தவிர, பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமமின்றி கோயிலுக்கு வந்து செல்ல பிற மாவட்டங்களிலிருந்து சிறப்பு பேருந்துகள் மற்றும் சென்னையிலிருந்து சிறப்பு இரயில்களை இயக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பக்தர்கள், பொதுமக்கள் வசதிக்காக தற்காலிக பேருந்து நிறுத்தம், வாகன நிறுத்தம் ஏற்பாடு செய்யப்படவுள்ளது எனவும், இந்த சிறப்பு வாய்ந்த இக்கோவில் திருவிழாவினை சிறப்பான முறையில் நடத்திட அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் திறம்பட பணியாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர், இணை ஆணையர்/ செயல் அலுவலர் சி.செல்வராஜ், உதவி காவல் கண்காணிப்பாளர் எஸ்.சர்வேஸ்ராஜ் இ.கா.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆ.பழனி, உதவிக் கோட்டப் பொறியாளர் கே.மயில்வாகனன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆ.ம. காமாட்சி கணேசன் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**